**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO.134/2019**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW1<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 09th day of September 2024.

**(All accused are present.)**

**S.C. No. 134/2019**

**09.09.2024**

**அ.த.சா.1 - திரு.நரசிம்மன் , த/பெ. நந்தையா**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது பெருஞ்சேரி கிராமம், ஊத்துக்கோட்டையில் வசித்து வருகிறேன். நான் இந்து ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 31.05.2015 அன்று காலை சுமார் 07.00 மணியளவில் எனது உடன் பிறந்த அக்கா லட்சுமி என்பவர் வீட்டிலிருந்தபோது பெருஞ்சேரி கிராமம் வெலமார் நாயுடு சமூகத்தைச் சார்ந்த குருவைய்யா, த/பெ.நர்னப்ப நாயுடு, சீனிவாசலு, த/பெ.நர்னப்ப நாயுடு, முருகைய்யா, த/பெ.நர்னப்ப நாயுடு, ராமச்சந்திரன், த/பெ.வெங்கம் நாயுடு, கோவிந்தன், த/பெ.நரசப்ப நாயுடு, மது, த/பெ.சந்திரய்யா நாயுடு ஆகியோர்கள் தர தரவென வீட்டிலிருந்து என் அக்காவை வெளியே இழுத்து வந்து அடித்துக்கொண்டிருந்தபோது சத்தம் கேட்டு நான் சம்பவயிடத்திற்கு சென்றபோது எதற்கு என் அக்காவை அடிக்கிறீர்கள் என்று கேட்டபோது இந்த தேவடியா முண்டையா, சொல்லக்கூடாத ஆபாச வார்த்தையை கூறி என் கண்ணுக்கு எதிராக அடித்துக்கொண்டிருந்தார்கள். எதற்கு என் அக்காவை அடிக்கிறீர்கள் என்று நான் கேட்டபோது என்னை மற்றும் என் தகப்பனார் நந்தையா, எனது தாயார் சரோஜா, என் மாற்றுத்திறனாளி அண்ணன் தாமோதரன், பெரிய அண்ணன் நடராஜன் ஆகிய எங்களை மேற்சொன்ன நபர்கள் கையாலும் கொம்பாலும் அடித்து பற தேவடியா பசங்களா, உங்களுக்கு எவ்வளவு திமிரு இருந்தால் எங்ககிட்ட வச்சிப்பிங்க, என்று சொல்லி அடித்துக்கொண்டே உங்களை குடும்பத்தோடு கொளுத்திவிடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள். எனது அக்கா லட்சுமி என்பவரை ஜாக்கெட், புடவையை கிழித்து மானபங்கம் செய்தார்கள். அவர்கள் அடித்ததில் எனது

அக்காவின் இடது கண்ணில் பலத்த காயம் ஏற்பட்டு திருவள்ளூர், அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். மேற்சொன்ன சம்பவம் தொடர்பாக சி-4, பெனாலூர்பேட்டை காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்து ஊத்துக்கோட்டை உட்கோட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகாரை நான் சொல்லச் சொல்ல என் நண்பர் எழுதினார். **புகார் அதசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

நான் எப்போது வழக்கறிஞராக பார் கவுன்சிலில் பதிவு செய்தேன் என்றால் 2013ம் வருடம் பதிவு செய்தேன். நான் எங்கே படித்தேன் என்றால் டாக்டர் அம்பேத்கார் குளோபல் லா இன்ஸ்ட்யூட், திருப்பதியில் சட்டம் படித்தேன். 2013ம் வருடம் முதல் ஊத்துக்கோட்டை நீதிமன்றத்தில் வழக்கறிஞராக உள்ளேன். புகார் எழுதியவர் யார் என்றால் என்னுடைய நண்பர் சுகுமார். புகாரை என் நண்பர் தான் எழுதினார் என்று போலீஸ் விசாரணையிலும் புகாரிலும் கூறவில்லை என்றால் சரிதான். புகாரை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். புகாரில் மாட்டுக்கொட்டகையை எரித்து விட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் புகார் கொடுத்த அன்றே விசாரணை செய்தார்கள். எங்கே விசாரணை செய்தார்கள் என்றால் இரவு 08.00 மணிக்கு மேல் சம்பவயிடத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். அப்போது என்னை மட்டும் விசாரித்தார்களா அல்லது குடும்பத்தார் அனைவரையும் விசாரித்தார்களா என்றால் எல்லோரையும் விசாரித்தார்கள். என்னையும் என்னுடைய குடும்பத்தாரையும் விசாரித்து வாக்குமூலமாக பதிவு செய்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். சம்பவத்தன்று சம்பவயிடத்தில் என் குடும்பத்தார், எதிரிகளை தவிர்த்து வேறு நபர்கள் இருந்ததாக புகாரில் கூறப்படவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையிலும் மேற்படி விவரங்களை கூறியுள்ளேன் என்றால் வெளி நபர்கள் இருந்ததாக கூறியுள்ளேன்.

எத்தனை நபர்கள் யார், யார் இருந்தார்கள் என்றால் என் நண்பர் வழக்கறிஞர் சுதாகர், சிவய்யா, வெங்கடாதிரி ஆகிய வழக்கறிஞர்களை உடனே அழைத்தேன். மேற்படி 3 பேர்கள் என் ஊரைச்சேர்ந்தவர்கள் அல்ல என்றால் சரிதான். என் ஊருக்கு அருகாமையில் உள்ள கச்சூரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த பிறகு நான் என்னுடைய நண்பர்களுக்கு அலைபேசியில் தொடர்பு கொண்டு அழைத்ததின்பேரில் அவர்கள் வந்தார்கள் என்றால் சம்பவம் நடக்கும்போது சொன்னேன், உடனே வந்தார்கள். சம்பவம் சுமார் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் 2 மணி முதல் 02.30 மணி நேரம் வரை நடந்தது. என் அக்கா இருக்கும் பகுதியில் சுமார் எத்தனை வீடுகள் இருக்கும் என்றால் 20, 30 வீடுகள் இருக்கும். 02.30 மணி நேரம் வரை எதிரிகள் எங்கள் குடும்பத்தாரை அடித்துக்கொண்டிருந்தார்களா என்றால் அடித்து சண்டை நடந்தது. எங்கள் இரண்டு தரப்புக்கும் சண்டை நடந்தது என்றால் சரியல்ல. எதிரிகள் தான் எங்களை தாக்கினார்கள். சம்பவத்தினால் என் குடும்பத்தை சேர்ந்த யாரும் மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லை என்றால் என் அக்கா லட்சுமிக்கு இடது கண்ணில் ஏற்பட்ட காயத்தினால் திருவள்ளூர், அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். மற்றவர்கள் யாரும் சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான். கச்சூரிலிருந்து என் ஊருக்கு வர எவ்வளவு தூரம் என்றால் 400 முதல் 500 மீ தொலைவில் உள்ளது. சம்பவயிடத்திலிருந்து பெனாலூர்பேட்டை காவல் நிலையம் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும். திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு என் ஊரில் இருந்து எத்தனை கிலோமீட்டர் என்றால் 24 கி.மீ. ஆகும். திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் என் காயம்பட்ட அக்காவை எத்தனை மணிக்கு சிகிச்சைக்கு சேர்த்தேன் என்றால் காலை சுமார் 09.30 மணிக்கு சேர்த்தேன். திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு நான் சென்றேனா என்றால் இல்லை. 10 கி.மீ தூரம் உள்ள பெனாலூர்பேட்டை காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் மாலை 07.30 மணிக்கு சென்றோம். உடனே புகார் கொடுத்தோமா என்றால் உடனே புகார் கொடுத்தேன். காலை 07.00 மணிக்கு

சம்பவம் நடந்து மாலை 07.30 மணிக்கு சென்றதற்கு போலீசார் ஏன் காலதாமதம் என்று கேட்டார்களா என்றால் இல்லை. புகாரிலும் காலதாமதத்திற்கு காரணம் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 31.05.2015 அன்று சம்பவம் நடந்து புகார் கொடுத்த நேரத்திற்கு கால தாமதம் என்னவென்றால் நான் மனஉளைச்சலில் வீட்டில் இருந்தேன். சம்பவத்தன்று என்னை விசாரித்ததிற்கு பிறகு போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. சம்பவத்தன்று என்னை விசாரணை செய்த அதிகாரியின் பதவி என்னவென்றால் டிஎஸ்பி திரு.மாணிக்கம் அவர்கள் என்னை விசாரணை செய்தார். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையின் நகலை நான் பெற்றுக்கொண்டேனா என்றால் பெற்றுக்கொண்டேன். முதல் தகவல் அறிக்கையில் பெற்றுக்கொண்டேன் என்று நான் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை, அவசரத்தில் போடவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது யார் என்றால் திரு.சுப்பிரமணி, உதவி ஆய்வாளர் பதிவு செய்தார். சம்பவத்திற்கு பிறகு 6 மாத காலத்திற்குள் ஏதாவது கொம்பை காட்டி இதனால் நீங்கள் தாக்கப்பட்டீர்களா என்று என்னிடம் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. என் அக்கா லட்சுமிக்கும் எதிரிகளுக்கும் இடம் சம்மந்தமாக உரிமையியல் வழக்கு உள்ளது என்றால் அன்றைய தினத்தில் அசல் வழக்கு நிலுவையில் இருந்தது. முதல் விசாரணையில் கூறியுள்ளபடி எதிரிகள் என் சமூகத்தின் பேரை கூறி திட்டவில்லை என்றால் சரியல்ல. என் அக்காவிற்கு முதலுதவி ஏதாவது கொடுத்தோமா என்றால் நேரடியாக திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். வேறு எங்கும் முதலுதவி சிகிச்சை அளிக்கவில்லை. கண்ணில் உள்ள காயம் தவிர வேறு காயம் இருந்ததா என்றால் உடலில் சிராய்ப்பு காயம் இருந்தது. வெளிப்புறக்காயம் எத்தனை இடத்தில் இருந்தது என்றால் உடலில் 5, 6 இடத்திற்கு மேற்பட்ட இடங்களில் கீறிய காயம் இருந்தது. எங்கள் வீட்டில் தெலுங்குமொழி பேசுவோம் என்றால் சரிதான். என்னுடைய பூர்வீகம் ஆந்திரா மாநிலம் என்றால் சரியல்ல. என்னுடைய பூர்வீகம் எங்கு என்றால் என் அப்பாவிற்கு திருத்தணி, என்

தாயாருக்கு பெருஞ்சேரி கிராமம் ஆகும். எங்கள் பகுதியில் தெலுங்கு பேசக்கூடிய எங்களுடைய குடும்பத்தார் எத்தனை பேர் உள்ளனர் என்றால் 10 குடும்பங்கள் உள்ளனர். பெருஞ்சேரி கிராமத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் உள்ளாரா என்றால் உள்ளார். அவரிடம் தகராறு நடந்த விவரத்தை கூறினேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் எதிரிகள் எங்களிடம் தகராறு செய்யவில்லை என்றாலும் நாங்கள் தான் தகராறு செய்தோம் என்றாலும் உரிமையியல் வழக்கு நிலுவையில் இருப்பதால் பின் யோசனை செய்து எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கை கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புகாரில் எதிரிகள் என் மாட்டுக்கொட்டகையை கொளுத்தியதாக கூறியுள்ளேன், ஆனால் போலீஸ் விசாரணையில் மாட்டுக்கொட்டகை எதிரிகளால் கொளுத்தப்படவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி விவரத்திலிருந்து என் புகார் உண்மைக்கு புறம்பானது என்று தெரியவருகிறது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.